★ தரைப்போர் கடற்போராக மாறிவருவதால்

# அரசு திணறல்!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

[illegible] திருவள்ளுவர் ஆண்டு [illegible] ஆவணி 15 இதழ் 195
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 31 — 8 1993

(லண்டன்)
விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் இதுவரை காலமும் தரையில் நடைபெற்றுவந்த மோதல்கள், தற்போது கடற்பரப்பு மோதல்களாக மாறிவருவது இலங்கை அரசுக்குப் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாக பி.பி.ஸி. நேற்றுத் தெரிவித்தது.

கடந்த ஒரு வாரத்தில் இலங்கைக் கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரண்டு கரும்புலித் [illegible]

(2-ம் பக்கம் பார்க்க)

## வீரகாவியம் படைத்தவர்களுக்கு
## நேற்று மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை கடற்பகுதியில் நேற்று முன்தினம் கடற்படையின் 'டோரா' படகை நிர்மூலமாக்கிய கடற்கரும்புலிகளான மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோருக்கு தமிழீழ மக்கள் தமது உணர்வுபூர்வமான அஞ்சலியை நேற்று செலுத்தினார்கள்.

வடதமிழ் ஈழம் முழுவதும் தோரணங்களாலும் கறுப்புக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு முக்கிய இடங்களில் எல்லாம் மாவீரர்களின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு

(2-ம் பக்கம் பார்க்க)

## ● கொக்குவில் பகுதியில்
# புக்காரா மீது புலிகள் தாக்குதல்
# 2 விமானங்களும் விரட்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)
கொக்குவில் பகுதியில் நேற்றுக் காலை 11.20 மணியளவில் குண்டு வீச்சு நடாத்த வந்த இரு புக்காரா விமானங்கள் மீது விடுதலைப்புலிகள் விமான எதிர்ப்புத் தாக்குதலை நடத்தி இரண்டு விமானங்களையும் விரட்டியடித்தனர். இத்தாக்குதலையடுத்து விமானங்கள் உயரத்திலிருந்தவாறே குண்டு ஒன்றை வீசி விட்டு ஓடி மறைந்தன.

இரு புக்காரா விமானங்கள் கொக்குவில் பகுதியை நோக்கி வட்டமிட்டதை அவதானித்த விடுதலைப்புலிகள் விமானங்கள் மீது கடும் தாக்குதல் தொடுத்தனர். விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதல் முயற்சியை இடைநடுவில் கைவிட்ட விமானங்கள் இரண்டும் உயரே எழும்பிச் மேற்படி தாக்குதலையடுத்து தமது தாக்

(2-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மீது விமானத் தாக்கு;
## பழிவாங்கல் நடவடிக்கையே

(கொழும்பு)
திறிலங்கா கடற்படையின் நவீன ரக நீருந்து விசைப் படகுகள், விடுதலைப் புலிகளின் கரும்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டமைக்குப் பழி வாங்கும் முகமாகவே யாழ்ப்பாணப் பகுதி மீது கடும் விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவத் தரப்பு தெரிவித்திருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

(2-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் தகர்க்கப்பட்ட
## டோரா படகை மீட்டெடுக்க
## கடற்படையினர் பெரு முயற்சி

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் நேற்று முன்தினம் பருத்தித்துறை கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட கடற்படையின் டோரா பீரங்கிப்படகை விடுதலைப்புலிகள் கைப்பற்றுவதற்கு முன் அதனைக் கடலிலிருந்து மீட்டெடுப்பதற்காக ஸ்ரீலங்கா கடற்படையினர் பெருமுயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

[illegible] உயர்ந்ததும் அதி நவீன வசதிகளையும் கொண்ட இப்படகை கடலிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கு கடற்படையினர் தற்போது முழுமூச்சுடன் ஈடுபட்டுவருவதாகவும் படகை மீட்க முடியாவிட்டால் கடலின் அடியில் வைத்தே அதனை அழித்துவிடும்படி கடற்படை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் மேற்படி மோதலில் பலியான கடற்படையினரின் உடல்கள் எதையும் இதுவரை கடற்படையினர்

(6-ம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சில்
## இளம்பெண் காயம்

(யாழ்ப்பாணம்)
கொக்குவில் பகுதியில் நேற்று இரு புக்காரா விமானங்கள் மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் இளம்பெண் ஒருவர் காயமடைந்தார். இருவீடுகள் முற்றாக சேதமடைந்தது. [illegible] சேர்ந்த

(2-ம் பக்கம் பார்க்க)

## பூநகரி இராணுவம்
## இளவாலி நோக்கி தாக்கு

(எழுதுமட்டுவாள்)
பூநகரியில் நிலைகொண்டிருந்த படையினர் இளவாலி வரையை நோக்கி நேற்று பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

நேற்று இரவு சுமார் 7-50 மணியளவில் ஏவப்பட்ட இச்ஷெல்கள் பலத்த சத்தத்துடன் வீழ்ந்து வெடித்தன. இதேவேளையில் ஆலங்கேணி

(6-ம் பக்கம் பார்க்க)

வீரகாவியமான
## கடற்புலிகளுக்கு
## அஞ்சலி பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)
வீர காவியமான கடற் கரும்புலிகளின் ஊர்தி அஞ்சலியும், அஞ்சலிப் பொதுக் கூட்டமும் இன்று நடைபெறும்.

காலை 8-00 மணியளவில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் கடற் கரும் புலிகளின் உருவப் படங்கள் ஊர்தியில் மக்கள் அஞ்சலிக்காக ஊர்வலமாக எடுத்துச்

(6-ம் பக்கம் பார்க்க)

## மணலாறு அலம்பில் பகுதியில்
## இரவுநேர பீரங்கித் தாக்கு

(மணலாறு)
மணலாறு அலம்பில் பகுதியில் கடலிலிருந்து இரவு நேரங்களில் படையினர் கடும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

உணவுக் கப்பல்களை
## கண்காணிக்கும் வேலையை
## செஞ்சிலுவை நிறுத்துமா?

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் பருத்தித்துறை கடற்பரப்பில், கடற்படையினர் மீது மேற்கொண்ட கரும்புலித்தாக்குதல் தமது பாதுகாப்புப்பகுதி எனக் கணிக்கப்பட்ட கடல் பிரதேசத்துக்குள் நடைபெற்றதா இல்லையா என்பதை, தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஆராய்ந்து வருவதாக பி.பி.ஸி. நேற்று தெரிவித்தது.

கொழும்பிலிருந்து வரும் உணவுப்பொருட்களை பருத்தித்துறை துறைமுகத்தில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கண்காணிப்பில் இறக்கப்படும்போது கடற்

(6-ம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படைத் தலைமை
## செயலகம் ஊர்ஜிதம்

(கொழும்பு)
பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்காக் கடற்படையின் டோரா படகு விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட சம்பவத்தை கூட்டுப்படை தலைமைச் செயலகம் நேற்று ஊர்ஜிதம் செய்தது.

நாலு அதிகாரிகள் உட்பட 12 கடற்படையினர், விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினரின் தாக்குதலைக் காணாமல்போயுள்ளதாக கூட்டுப்படை தலைமையகம் மேலும் அறிவித்துள்ளது.

(வி)

## தமிழ்ப் பெண்
## கைது

மட்டக்களப்பு
வெலிகந்த ரயில் நிலையத்தில் இளம் தமிழ்ப்பெண் ஒருவர் அரசபடையினரால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நாவற்குடாவைச் சேர்ந்த இப்பெண் வெளிநாட்டுப் பொருள் ஒன்றை

6-ம் பக்கம் பார்க்க)

## வானொலி விளம்பரம்

### அராலியூரின் நாடகங்கள்

இலங்கை வானொலியின் பல சேவைகளிலும் ஒலிபரப்பப்படுகின்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை நீங்களும் படியுங்கள். நடியுங்கள் 'செட்டிக்காரர்கள்'' 2 ''முதலாம்பிள்ளை'' 30/- 19 நாட்கள். (சி-421)

# அம்பாறையில் படையினரால் தமிழர்கள் தொடர்ந்து கடத்தல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் அதிரடிப்படையினரால் பெண்கள் உட்பட பலர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜூலை 24ம் திகதி காலை தம்பிலுவில் கிராமத்தை இரவு வேளையில் சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏரம்புவசந்த ராசா, ஞானமுத்து சோசலை, க. திருஞானவதனி, க. லோகிதவதனி ஆகியோரை கடத்திச் சென்றுள்ளனர்.

இதே கிராமத்தை மறுநாள் சுற்றிவளைத்த படையினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன் மனைவியான தங்கராசா, பூரணம் உட்பட அவர்களின் பிள்ளைகளான புஸ்பராணி புஸ்பமலர் ஆகியோரையும் திருமதி வன்னியசிங்கம் லட்சுமி என்பவரையும் கடத்திச் சென்றுள்ளனர்.

இம்மாதம் 6ம் திகதி இரவு தாண்டியடி என்ற கிராமத்தினை சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் திருமதி லலிதா ஜெயசிங்கம் நடராஜன் சிவராஜன் ஆகியோரைக் கைது செய்துள்ளனர். இதற்குமுதல் நாள் இலங்கை 48 வயதான முருகேசு என்பவரையும் பிடித்துச் சென்றனர்.

இதேவேளை கடந்த மாதம் 22ம் திகதியன்று பகல் திராயக்கேணி புரத்தில் வைத்து அதிரடிப்படையினரால் திருமதி பிரான்ஸிஸ் சோமசுந்தரம் என்பவர் பிடித்துச் செல்லப்பட்டார், இவர் காஞ்சிரம்குடா முகாமில் வைக்கப்பட்டுள்ளார். கடந்த மே மாதம் 18ம் திகதி இப்பகுதியில் வைத்து திருமதி இராசலட்சுமி சண்முகநாதன் என்பவரும் கைதுசெய்யப்பட்டு திருக்கோவில் முகாமில் வைக்கப்பட்டுள்ளார். (ரி)

### கொக்குவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுவிட்டதை அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

இதேவேளையில் இப்பகுதியில் நேற்றுமுன்தினம் தாக்குதல் மேற்கொண்ட விமானங்கள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து விமானமொன்று புகை கக்கியவாறு மேலெழுந்து பலாலி நோக்கி விரைந்ததும் தெரிந்ததே. (க)

### மாணவர்களது உணவு முத்திரைகளை பணமாக்குவது குற்றம்

(வட்டுக்கோட்டை)

மாணவர்களது உணவு முத்திரைகளை பணமாக்கி வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவோர்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் சத்துணவு பெற்றுக்கொள்ளவேண்டுமென வழங்கப்படும் உணவு முத்திரைகளை பணமாக்கி வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர் சிலர் தமது பிள்ளைகளின் உணவு முத்திரைகளைப் பணமாக்கி தமது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதையும் அதிபர், ஆசிரியர்கள் மாணவரது உணவு முத்திரைகளைப் பணமாக்கி பாடசாலைத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதையும் நிறுத்தவேண்டுமெனவும் சட்டவிரோதமான முறையில் மாணவர் முத்திரைகளைப் பயன்படுத்துவோர்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. —133-இ

### சென்னை குண்டுவெடிப்பு மத்திய புலனாய்வு பிரிவின் விசாரணை ஆரம்பம்

(சென்னை)

சென்னையில் ஆர். எஸ். எஸ். அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணையை மத்திய புலனாய்வுப் பிரிவு ஆரம்பித்துள்ளது.

இதற்கென சென்னையில் மத்திய புலனாய்வுப் பிரிவு விசேஷ கட்டுப்பாட்டுத்துறை ஒன்றையும் ஆரம்பித்துள்ளது. —இ

### யாழ். மீது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒரு வார காலத்திற்குள், இளாலிப் பகுதியில் கடற்படையினரின் இரண்டு நீருந்து விசைப் படகுகள் விடுதலைப் புலிகளின் கரும்புலித் தாக்குதலால் நிர்மூலமாக்கப்பட்டதும், நேற்று முன்தினம் பருத்தித்துறைக் கடற் பகுதியில் 'டோரா' நவீன ரகப் படகு நிர்மூலமாக்கப்பட்டதும், பல கடற்படையினர் கொல்லப்பட்டதும் விடுதலைப் புலிகளால் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டமையும் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரைப் பெரிதும் ஆத்திரமடையச் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -க-இ

### தரைப் போர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்கள், இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல்களில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது. இது புலிப் படையினருக்கு மாபெரும் வெற்றி என்று பி. பி. ஸி மேலும் தனது செய்தியில் தெரிவித்தது. -வி-இ

### 'எல்லாளன்' வரலாறும் திரைப்படமாகும்

(கொழும்பு)

எல்லாளமன்னனின் வரலாற்றையும் திரைக்காவியமாக உருவாக்க வேண்டும்.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ இவ்வாறு கூறினார்.

இலங்கை திரைப்படக்கூட்டுத்தாபனத்தில் நேற்று முன்தினம் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியை ஆரம்பித்து வைத்துப் பேசியபோதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

இந்த வைபவத்தில் பேசிய அமைச்சர் மேலும் கூறியதாவது:

துட்டகைமுனு, வீரபுரன் அப்பு, கெப்பிட்டிபொல போன்றோரின் வரலாறுகளும் திரை ஓவியங்களாக வரவேண்டும். அத்துடன் எல்லாள மன்னனின் வரலாறும் வெள்ளித்திரையாக உருவாகவேண்டும்' (இ)

### வீரகாவியம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அஞ்சலி செலுத்தியதைக் காணமுடிந்தது.

வீதிகள், வர்த்தக நிலையங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்கள் எல்லாம் மாவீரர்களின் படங்கள் வைத்து, மக்கள் தமது அஞ்சலியை உணர்வு பூர்வமாகச் செலுத்தினர்.

மறைந்த மாவீரர்களின் அஞ்சலிக் கூட்டங்களும் தமிழீழப் பகுதி எங்கும் நேற்று பரவலாக நடைபெற்றன. இக்கூட்டங்களில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டு மறைந்த மாவீரர்களுக்கு தமது அஞ்சலியை செலுத்தினர்.

பம்பைமடு, நாவற்குடா, பூநகரி, கிளிநொச்சி ஆகிய இடங்களிலும் மாவீரர்களின் வீர வணக்கக் கூட்டங்கள் நேற்றுநடைபெற்றன. (க-56-162-157)

### பிரெஞ்சு மருத்துவக்குழுவின் மருந்துகள் களவு

(நெல்லியடி)

பருத்தித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சேவை செய்யும் பிரெஞ்சு வைத்தியக் குழுவினரின் மருந்துக்களஞ்சியத்திலிருந்து பெறுமதி மிக்க மருந்துகள் கடந்த வாரம் களவாடப்பட்டுள்ளன.

இதுபற்றி பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியிடம் பிரெஞ்சு வைத்தியக்குழுவினர் முறையிட்டுள்ளனர்.

பொதுமக்களின் நன்மைக்காக சேவையாற்றும் இவ்வைத்தியசாலையில் மருந்துகள் களவு போனது வசதி குறைந்த நோயாளருக்கு பெரும் பாதிப்பாக உள்ளதாகவும் கூறப்படுகிறது. (160-இ

### குண்டு வீச்சில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எம். சந்திரனா (23 வயது) என்பவரே காயமடைந்தவராவர். இவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 11-20 மணியளவில் கொக்குவில் பகுதியை வட்டமிட்ட இரு புக்காரா விமானங்களில் ஒன்று உயரமான இடத்திலிருந்து குண்டுத் தாக்குதலை மேற்கொண்டது.

பலத்த சத்தத்துடன் வீழ்ந்து வெடித்த இக்குண்டினால் இப்பகுதி முழுவதும் ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்ததாகவும் குண்டுச் சத்தத்தினால் பல கட்டிடங்கள் அதிர்ந்ததாகவும் பலமைல்களுக்கு இச்சத்தம் கேட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் நேற்றுமுன்தினம் விமானக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்ட அதேபகுதியிலேயே நேற்றும் குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியேறியதனால் பெருமளவு உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாக அறியப்படுகிறது. (க-162 56-157)

### வடமராட்சியில் கடலில் வீழ்ந்த 15 ஷெல் வெடிக்கவில்லை

(நெல்லியடி)

வடமராட்சிப்பகுதிக் குடியிருப்புகள் மீது பலாலி இராணுவ முகாமிலிருந்தும் நேற்று முன்தினம் கடற்படையின் படகுகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட 25க்கும் மேற்பட்ட ஆட்லெறி ஷெல்களில் 15ஷெல்கள் கடலில் வீழ்ந்தமையினால் வெடிக்கவில்லை.

வல்வெட்டித்துறையிலும் சுப்பர் மடத்திலும் இருவீடுகள் உட்பட 5ற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

இதேவேளை இப்பகுதியில் கடும் விமானத்தாக்குதலும் இடம்பெற்றது. (160-சி)

### விவசாயிகள், சுயதொழில் செய்வோருக்கு கடனுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுயதொழில் செய்வோர் விவசாயிகள் ஆகியோருக்கு கடனாக பத்தாயிரம் ரூபா இலங்கை வங்கி கடனை செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

காலக்கிரமத்தில் இக்கடன் தொகை இரண்டு மடங்காக வழங்குவதற்கும் ஆலோசிக்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

இக்கடன் அடிப்படையில் முன்பு கடன் பெற்று திரும்பிச் செலுத்தாதவர்கள் இக்கடன் கோரி விண்ணப்பிக்க முடியாது என்றும் தெரிவித்தார். —162

சன்மார்க்கசபை — குரும்பசிட்டி

அமரர் த. இராசரத்தினம் ஞாபகார்த்தப் புலமைப்பரிசில்

குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட க. பொ. த. உயர்தர 1991 ஆகஸ்ட் விசேட பரீட்சை, 1992 ஆகஸ்ட் பரீட்சை என்பனவற்றிற் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற தகுதியுடையவர்களிற்கு மேற்படி புலமைப்பரிசில் வழங்கப்பட இருப்பதால் 15-09-93ற்கு முன் தகுதியானோர் இணைச்செயலாளர் சி. கௌரிபாலனுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

ச. பழனிவேல்,
சி. கௌரிபாலன்
இணைச்செயலாளர்கள்.

(இ-435)

வேலுண்டு வினைதீர்ப்பாய் முருகா!!
வேங்குகிறோம் அருள்காப்பாய் முருகா!!

★ சகலவிதமான உணவுப் பொருட்கள்
★ பாலுணவுப் பொருட்கள்
★ அத்தியாவசியப் பொருட்கள்

சகல தமிழ் தினசரிகள் வெளியீடுகள்
வாசகர் வீட்டுசேவை

சிவன் ஸ்ரோர்ஸ்

வளாகச் சந்தி — திருநெல்வேலி

கண்ணிலே நீர் எதற்கு முருகா!!
காலமெல்லாம் காப்பதற்கே வேலவா!!

★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சிகள் இங்கே வீடியோ (மிக்ஸிங்) படமாக்கிடவும்

★ நெஞ்சில் நிலைக்கும் பழைய புதிய சினிமாப்பாடல்களை உங்கள் எண்ணம்போல் ஓடியோ ஒளிப்பதிவு செய்யவும்

★ வீடியோ படக்காட்சிகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும்

எம்மவர் நினைவில் நிழலாடும் நிறுவனம்

சுப்பலோ

வீடியோ ஓடியோ சென்ரர்

198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**மணிவாக்கு**

"சிறப்புமிக்க நிகழ்வுகள் பல வேளைகளில் இளைஞ்சிறு சந்தர்ப்பங்களிலிருந்து தான் உதிக்கின்றன".

— விவி.

## நமது நோக்கு

### ஆடிய பாதம் ஆடுகிறது

மாகாண சபைக்கு மேலாக எதையும் வழங்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

இலங்கை அரசியலில் பல்லாண்டு காலம் ஊறித் திளைத்த முதியவர், அரசிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் வேளையில் கருத்து வெளியிட்டிருக்கிறார்!

1944ஆம் ஆண்டிலேயே, இலங்கை சுதந்திரமடையுமுன்பே தனிச் சிங்களமசோதா கொண்டு வந்த பிரமுகர் என்பதை நாம் மறப்பதற்கில்லை,

பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் குழப்பியடிக்க, கண்டிக்குப் பாதயாத்திரை மேற்கொண்டு இன்றைய நெருக்கடி நிலைக்கு அத்திவாரமிட்ட பெருமைக்குரியவர்!

"போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்!" என்று இராணுவ பலத்தில் அதீத நம்பிக்கை வைத்துப் போர் முரசு கொட்டிய மாபெரும் தலைவர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்திய பின், தென்னிலங்கையில் ஜே. வி. பி. யின் எழுச்சிகண்டு வன்முறை வெப்பம் தாளாது "பட்டது போதும்! படமுடியாது இனித்துயரம்!" என்று கூறிக் கொண்டு பதவியை விட்டு இறங்கிய அனுபவஸ்தர்!

ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் வாய் மூடி மௌனியாகி விட்டு பெளத்த துறவியாகப் போகிறேன் என்று கூறிக் கொண்டிருந்தவர்.

இன்று மீண்டும் அரசியற் கருத்துக்களை அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கிறார்.

மாகாண சபையை ஏற்று வட - கிழக்கில் ஆட்சி அமைத்தவர்களே, 13வது திருத்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் அர்த்தமற்றது. மத்திய அரசின் தலையீட்டினால் பாதுகாப்பு, போக்குவரத்து, கல்வி, விவசாயம் போன்ற பல துறைகளிலும் அதிகாரம் பரவலாக்கல் நடைபெறவில்லையென விளக்கமான அறிக்கை தயாரித்து 1989 ஜூலையில் இலங்கை இந்திய அரசுகளுக்கு அனுப்பியதை ஜே. ஆர். மறந்துவிட்டாரா?

அரசஅதிபராக இருந்து ஓய்வுபெற்றவர் நெவில் ஜெயவீரா உதவி வழங்கும் நாடுகளுக்கு விசேட நிபுணத்துவ ஆலோசகராக அவர் கடமையாற்றியபோது தயாரித்த ஆய்வறிக்கையில், மாகாணசபை வெளியிட்ட அறிக்கையை அநுபந்தமாக இணைத்து 1990ல் வெளியிட்டதை மறந்துவிட்டாரா?

ஆடியபாதம் ஆடாதிருக்காதாம்!

# இந்தியாவுக்கு தப்ப முயன்ற கொலையாளி நடுக்கடலில் சிக்கினர்

### முல்லைத்தீவில் சம்பவம்

(திருகோணமலை)

தான் தாக்கியதால் அந்த நபர் இறந்ததை அறிந்த கொலையாளி ஒருவர் திருகோணமலையில் ஒரு இழுவைப் படகை களவாக எடுத்துக்கொண்டு, 18 வயது இளைஞர் ஒருவரையும் சுத்திமூலையில் பயமுறுத்தியபடி இந்தியாவுக்கு தப்பிச்செல்ல முயன்றபோது முல்லைத்தீவு கடலில் கடற்படையினரால் பிடிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

75 வயதான பியதாசா என்பவரை, கடுமையாக தாக்கிவிட்டு தலைமறைவாகி இருந்த குறிப்பிட்ட நபர், கடந்த 12ம் திகதி அந்த வயோதிபர் இறந்ததை அறிந்ததும் இந்தியாவுக்கு தப்பியோட தீர்மானித்தனர்.

அன்றே கரையில் நின்ற இழுவைப்படகையும் அதற்கு காவலாளராக நின்ற இளைஞரையும் கடத்தி இந்தியாவுக்கு தப்பிச்செல்ல முன்றபோது நடுக்கடலில் முல்லைத்தீவு கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு பிடிபட்டனர்.

முன்னரும் இந்த நபர் கொலைக்குற்றம் புரிந்திருந்த சம்பவம் தெரியவந்துள்ளது. அன்று இவர் பிடிபட்டிராவிடில் இளைஞரையும் கொன்று, இழுவைப்படகையும் இந்தியாவுக்கு கொண்டு விற்றிருப்பார் என இவரை காவலில் வைத்திருக்கும் திருகோணமலை பொலிசார் தெரிவித்துள்ளனர். —கே-இ

### கிளாலி கடலில்
# புலிகள் நடமாட்டத்தை தடுக்க தீவிர முயற்சி

(கொழும்பு)

கிளாலிக் கடலேரிப் பகுதியில் புலிகளின் நடமாட்டத்தை முறியடிப்பதற்கு கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கடற்படை வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

கடந்த வாரம் இப்பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில், இரண்டு விசைப் படகுகளையும், பத்து கடற்படையினரையும் அரசு இழந்ததுள்ளதை அடுத்தே படையினர் இவ்வாறு அறிவித்துள்ளனர்.

இதேவேளை, வடக்கில் கடற்புலிகளின் கை பெருமளவு ஓங்கிவருவதாகக் கொழும்புப் பத்திரிகைகள் கூறிவருவதும் தெரிந்ததே. சி

# இல. - இந்திய ஒப்பந்தமே பிரச்சினைக்கு தீர்வாகும்

### — ஜே. ஆர். கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண 1987ல் கைச்சாத்தான இந்திய-இலங்கை ஒப்பந்தமே தற்போது சிறந்த வழியாக இருக்குமென முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் அப்போது பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியுடன் தான் செய்துகொண்ட அந்த ஒப்பந்தமே இலங்கை பிரச்சினைக்கு தீர்வுகாண சாத்தியமான வழி என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ரி)

### இலங்கை வங்கியில் பணிபுரியும்
# 224 பாதுகாப்பு ஊழியர்களை வேலைநீக்கம் செய்ய முடிவு

(கொழும்பு)

இலங்கை வங்கியில் பணிபுரியும் இருநூற்றி இருபத்தி நாலு தற்காலிக பாதுகாப்பு ஊழியர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை வங்கி நிர்வாகம் எடுத்துள்ளது. இவர்களுக்கான வேலைநீக்கக் கடிதங்கள் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி அந்தப்பகுதி வங்கி நிர்வாகிகளால் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலை நீக்கத்தில் கணிசமான தொகையினர் யாழ். மாவட்ட இலங்கை வங்கிக் கிளைகளில் பணிபுரிந்து வருகின்றனர். இந்நடவடிக்கையை எதிர்த்து இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் கண்டனத்தைத் தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கையிலும் இறங்கவுள்ளனர். (எஸ்)

## உணவு முத்திரை

(மானிப்பாய்)

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான யூன், யூலை மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் யாழ். சமூக சேவைப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளன.

## மேசைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகம், யாழ் ரோட்டறிக் கழகத்தின் ஆதரவில் நடாத்தும் மேசைப் பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும் இருந்தும் ஒற்றையர், இரட்டையர் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக விளையாட்டுப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி 07-09-93. (சி)

## சர்வமத 3-ம் கட்ட விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ சர்வமத மகாசபைப் பிரசங்க நூற்றாண்டின் 3 ம் கட்ட விழா அண்மையில் திருநெல்வேலி இராமகிருஷ்ணலயத்தில் யாழ் மருத்துவபீடத்தைச் சேர்ந்த செல்வி திருமகள் சாந்திகேசு தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகானந்தா ராஜ் அன்பளிப்புச் செய்த பெறுமதிமிக்க உடுபிடவைகள் வறுமை நிலையில் உள்ள 84 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. (ம)

## இராசிபலன்

**31-08-1993**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்கு ஆவணி 15)**

சதுர்த்தி காலை 6 52 வரை அவிட்டம் சித்தயோகம் பி. ப 4 57 வரை இராகுகாலம் மாலை 3-05 முதல் 4-35 வரை சுபநேரம் காலை 10-35 முதல் 12-05 வரை பூரண விரதம்

மேடம்; மனச் சந்தோசம் அறிஞர் சந்திப்பு, வெகுமதி,

இடபம்: புதிய அந்தஸ்து, பணவரவு, காரிய பலிதம்

மிதுனம்: கெட்டவார்த்தை பொய் பேசுதல் மனவேதனை.

கடகம்: அவமதிப்பு, தொழில் இழப்பு, கடும்வாதம்

சிம்மம்; குடும்பபற்று, தாய் வழி உதவி, பொதுத்துறை ஈடுபாடு

கன்னி: தயாள சிந்தனை, தொழில் மேன்மை, அவசரிய செலவு.

துலாம்: பகற்ற மனோ பாவம், வேலைப்பளு, கருத்துமுரண்பாடு.

விருச்சிகம்: கலையார்வம், கோபத்தினால் சினம், மனச்சுமை

தனுசு: உறவினர் தயவு, கடன் வசூல், பயண நன்மை.

மகரம்: உடல் உபாதை, கணவன் கண்டிப்பு, அசைவ உணவு.

கும்பம்: புதிய வருவாய், கல்வியால் மேன்மை, தெய்வ தரிசனம், விரோதம்.

மீனம்: தொழில் நஷ்டம், ஆவேச உணர்வு, விரோதம்,

ஜோஸ்யர்

### தனியார் பஸ் கட்டணம்
# தலைநகரில் உயரும்

(கொழும்பு)

கொழும்பில் தனியார் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளது. இந்த அதிகரிப்பு தற்போதைய கட்டணங்களிலும் பார்க்க 50 வீதம் அதிகரிக்கும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை மேல்மாகாண சபை, இந்தப் பஸ் கட்டண உயர்வை அமுல்படுத்த தம்மிடம் அனுமதி பெறவேண்டும் என்று தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளது

இந்த கட்டண உயர்வு பொதுமக்களிடையே பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தலாமெனக் கூறப்படுகிறது —ம-இ

### வடக்கு-கிழக்கில்
# இடைக்கால நிர்வாகம் சட்டவிரோதமானது

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதியில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பது சட்ட விரோதமானது.

அரசியலமைப்பு சட்டத் துறை அமைச்சர் கே. என். சொக்ஸி அரசாங்கத்துக்கு இவ்வாறு ஆலோசனை தெரிவித்துள்ளார் இந்த இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கு அரசியலமைப்பில் வசதிகள் எதுவும் கிடையாது.

வடக்கு - கிழக்கு பகுதியில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்க வேண்டுமென நான்கு தமிழ் அரசியல் கட்சிகள் அண்மையில் அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தன.

இதனையடுத்தே இத்தகைய ஒரு சபையை அமைப்பதற்கு அரசியலமைப்பில் வசதிகள் எதுவும் உள்ளனவா என அரசு திரு. சொக்ஸியின் ஆலோசனையைப் பெற்றது. (இ-கி)

# நெடுந்தீவிலிருந்துயாழ்.வந்தவர்களை மீண்டும்சொந்தஇடங்களுக்கு அழைத்து செல்ல ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பகுதியிலிருந்து பல்வேறு தேவைகளின் நிமித்தம் யாழ். மாவட்டத்திற்கு வந்தவர்களை மீண்டும் நெடுந்தீவுப் பகுதிக்கு அழைத்துச் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்பிரகாரம் சுமார் 20 பேர் இன்று ஊர்காவற்றுறை துறைமுகம் சென்று கப்பல் மூலம் நெடுந்தீவுக்கு செல்ல ஏற்பாடாகியுள்ளது.

சுமார் இரண்டரை மூன்று வருடங்களுக்கு முன்னர் அப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தொழில் நிமித்தமாகவும், வேறு பல தேவைகளுக்காகவும் வந்தவர்கள் நெடுந்தீவுக்கான கப்பல் போக்குவரத்துச் சேவை தடைப்பட்டதனால் தொடர்ந்து இங்கேயே தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது. —158

**காட்டில் மரங்களைத் தறிக்காதீர்**
**நாட்டின் வளங்களைக் கரைக்காதீர்**

## கனலெனப் பாய்ந்த காவிய வீரர்!

கடலெழும்! கரும்புலி படகொலி அதிர்ந்திடும்.
கடலெழப் பாய்ந்த நம் கரும்புலி வீரரின்
கண்களில் விடுதலைக் கனலெழும்
பொடிபடும்! எதிரிகள் படையணி அடிபடும்.
அழித்திட வந்தவர் 'சோழு' கடலினில் சிதறிடும்
சிங்கள படையின் முது(கு) உடைபடும்

உயிரெழும்! உயிர்ப்புடன் விடுதலை முரசெழும்
பயிரிட உயிரினைத் தந்த நல் உரங்களின்
வரைபடம் நெஞ்சினில் உருப்பெறும்.
கடல் எழும்; கடலினில் நிமிர்ந்தொரு கதைசொல்லும்
கனலெனப் பாய்ந்தவர் காவிய வீரரின்
சாதனைச் சரித்திரம் திறஞ் சொல்லும்

- இயல்வாணன்

# தொண்டைமானாறு

# செல்வச்சந்நிதி முருகன் ஆலய

# இரதோற்சவம் சிறப்பு மலர் (31-08-1993)

## பக்தர்களுக்கு அருள்பாலிக்க

## தேரேறி வருகிறான் செல்வச்சந்நிதி முருகன்

தேவர்களை சூரபத்மனின் கொடுமையிலிருந்து விடுவிக்கும் பொருட்டு இறைவன் திருமுருகனை அவதாரம் செய்

ச். கார்த்திகைப் பெண்களால் எடுத்து வளர்க்கப்பட்டதால் முருகனுக்கு "கார்த்திகேயன்" என்று பெயர் ஏற்பட்டது.

காங்கை வழியாக வந்ததால் "காங்கேயன்" என்றும், அக்கினியிலிருந்து தோன்றியதால் "அக்கினிப்பூ" என்றும், சரவணப் பொய்கையில் தோன்றியதால் "சரவணபவன்" என்றும், வைகாசி மாத விசாக நட்சத்திரத்தில் தோன்றியதால் "விசாகன்" என்றும், ஆறு குழந்தைகளும் சேர்ந்து ஒரே குழந்தையாக மாறியதால் "ஸ்கந்தன்" என்றும், பேரழகுடன் விளங்கியதால் "முருகன்" என்றும், தேவர்களின் சேனாதிபதியாக விளங்கியதால் "தேவசேனாதிபதி" அல்லது "சேனானி" என்றும், மயில் வாகனமாக கொண்டதனால் "மயில்வாகனன்" ஆகவும் சக்திவேல் உடையவனுதலால் "சக்திதரன்" என்றும், சேவல் கொடியை உடையவனுதலால் "குக்குடக் கொடியோன்" என்றும், ஆறு திருமுகங்களைக் கொண்டவன் என்பதால் "ஷண்முகன்" என்றும், சிவக்குமரன் போற்றப்படுகின்றான். அவனே செல்வச்சந்நிதி முருகன்.

பஞ்சபூதங்களின் [வழியாக முருகனின் அவதாரம் நடைபெறுகிறது. சிவபெருமானின் நெற்றியிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளும்] அப்படியே வந்திருக்குமானால் அவற்றின் உஷ்ணத்தை யாரும் தாங்க முடியாமல் போயிருக்கும். அதனால்தான் அந்தப் பொறிகள் வாயு, அக்கினி, [illegible], நீர், வானம் நிலம் ஆகிய பஞ்சபூதங்களின் வழியாக வந்து மெல்ல மெல்ல மென்மையுடையதாக மாறிப் பிறகு குழந்தையாக அவதாரம் ஆகின்றது. இந்த ஆறு அருட்பெரும் ஜோதிகளும் பல திசைகளையும் கடந்து உலகம் தாங்கும் தன்மை பெற்று மென்மை மிக்க குழந்தையாக ஆயிற்று.

பஞ்சபூதங்களின் சேர்க்கையால் அமைந்த உலகம் முழுவதற்கும் தலைவன் முருகன் என்பதற்கு அடையாளமாக அவன் பஞ்சபூதங்களின் வழியாலும் சேர்க்கைகளாலும் தோன்றினான்

முருகப்பெருமானுக்குப் பதினெட்டு கண்கள். சிலர் பன்னிரண்டு என்பர். சிவபெருமானுக்கு மூன்று கண்கள். இடக்கண் சந்திரன், வலக்கண் சூரியன், நெற்றிக்கண் அக்கினி. அதனால்தான் சிவனை முக்கண்ணன் என்கிறோம்.

முருகப்பெருமான் சிவகுமாரன். அப்பாவைப்போலத்தான் பிள்ளையும் இருக்கும். அப்பாவுக்கு மூன்று கண்கள் என்றால் முருகனுக்கும் மூன்று கண்களவதால். எனவே முருகனின் ஆறுமுகங்களுக்கு பதினெட்டு கண்கள் உள்ளன.


ஐயா சச்சிதானந்தம்

சிவனே முருகன். முருகனே சிவன். சிவபெருமானுக்கு பிறப்பும் இறப்பும் கிடையாது. ஆகவே முருகனுக்கும் பிறப்பும் இறப்பும் கிடையாது

"செம்மான் மகளைத் திருடும் திருடன்; பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்று அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் குறிப்பிட்டுள்ளார்.

"கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய" என்று கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுகிறார்.

இங்கு உதித்தனன் என்றால் பிறந்தனன் என்ற பொருளில்லை. என்றைக்கும் உள்ள எம்பெருமான் சரவணப் பொய்கையில் வெளிப்பட்டு தோன்றினார் என்பதேயாகும். அவனது திருக்கோலம் செல்வச் சந்நிதியில் ஞானஒளியாக விளங்குகின்றது.



### அண்மினே மருள்செய் வாயே!

துய்யனே வதனத் தொட்டே
தட்டரை நொடியில் மாய்த்த
கையனே! கங்கை மைந்தா!!
கார்த்திகை மாதர் சேர்த்த
மெய்யனே! வள்ளி தெய்வ
மேவிய மெய்ம்மை ஞான!
ஐயனே! செங்கை கந்தா!!
அண்மினே மருள்செய் வாயே!

— எம். கே. இளையப்பு

தேரேறி வலம் வரும் முருகா! தமிழர் துயர் துடைக்கும் வேலா!!
கருணைமழை பொழிவாய் சந்நிதி கந்தா சரணம்!!

★ மங்கையர் மனதில் நீக்கமற நிறைந்திருக்கும்
★ வர்ண வர்ண பட்டு, பருத்தி பிடவைகளுக்கு
★ ஆஹா என கொஞ்சும் அழகில் மிஞ்சும்
வர்ணனைகளுக்கு ஒரே ஸ்தாபனம்

ஶ்ரீமாட்டி ஶ்ரீமாட்டி

[ஜவுளி சமுத்திரம்]
122, மின்சாரநிலைய வீதி, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

பல்லாயிரக் கணக்கான மக்கள் புடைசூழ தேரேறி வீதிவலம் வரும்
சந்நிதி முருகா நீயே கதியென இறைஞ்சுகிறோம்

நகரில் அமைந்திருக்கும் மருந்து விற்பனையாளர்களில் பலரின் பாராட்டைப் பெற்ற ஒரே மருந்து விற்பனையாளர்

எஸ்ரி மெடிக்கல்ஸ்

490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்ப்பாணம் பொதுமருத்துவமனை முன்பாக)

தேரேறிவரும் முருகா!!
அடியவர்களை அரவணைத்துக் காப்பாய் குமரா!!

★ தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள்
★ மணப்பெண்களின் சோடனை நகைகள்
★ லேஸ், நூல்வகைகள் சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகுசாதனப் பொருட்கள்

மொத்த சில்லறை வியாபாரிகள்

ஜெயா அழகுசாதன மாளிகை
177/1, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்.

ஜெயா பேன்ஸி ஹவுஸ்
160, நவீனசந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

ரேகா அழகுசாதன விற்பனை நிலையம்
25, 48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

செல்வச்சந்நிதி முருகா!! ஈழத்தமிழர் துயர் துடைத்திடுவாய் கடம்பா!!

வளரும் குழந்தைகள் முதல்
தாய்மையடையும் தாய்மார் வரை
சிறந்த போஷாக்குணவு

யாழ். மருத்துவர் சங்கத்தால்
அங்கீகரிக்கப்பட்ட
சமவிகித உணவு

ஜீவாகாரம்
(போஷாக்குணவு)

அண்ணா கோப்பி

யாழ்ப்பாணம் இணுவில்
சுன்னாகம் திருநெல்வேலி

சகல விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

## இன்று

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுரு நாத குருபீட வேதாந்த மடப் பரிபாலன சபையால் நடாத்தப்படும் மாதாந்தச் சொற்பொழிவுச் சபை மண்டபத்தில் இன்று 31-ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணியளவில் "திருவாசகம்" என்ற தலைப்பில் பண்டிதர் வித்துவான் சைவப்புலவர் இ. திருநாவுக்கரசுவின் சொற்பொழிவு இடம்பெறும். —ம

## பருப்பின் விலை குறைப்பு

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தால் பருப்பின் விலை ஒரு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக இந்நிறுவனத்தின் தலைவர் எவ். எ. காசீம் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஒரு கிலோ பருப்பின் விலை 52 ரூபாவாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (162)

## நெசவுப் பயிற்சி இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நெசவு ஆசிரியப் பயிற்சிப் பாடசாலையில் 91-ம், 92 ம், 93-ம் ஆண்டுகளில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு 1-ம் ஆண்டு இறுதிப் பரீட்சைகள் நாட்டின் அசாதாரணச் சூழ்நிலை காரணமாக நடைபெறாமலிருந்து விசேட பரீட்சையாக எதிர்வரும் செப்டம்பர் மாதம் 18-ம், 19-ம், 20 ம் திகதிகளில் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு அனுமதிப் பத்திரம் யா. பு. கை. நெசவு உதவிப் பணிப்பாளரினூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிடைக்காத மாணவர்கள் மேற்படி அதிபருடன் யாழ் செயலகத்தில் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (162

தொண்டைமானாறில் தேரேறிவரும் முருகா!! ஈழவர் குறை தீர்த்திடுவாய் முருகா, சரணம்!!

யாழ். நகரில் தேடுதற்கரிய சகல நூல்களையும், சஞ்சிகைகளையும் முதன் முதலில் விற்பனைசெய்யும் நிறுவனம்; மனம்போல் சகல பாடசாலை உபகரணங்களுக்கும்

மக்மிலன் புத்தகசாலை - யாழ்ப்பாணம்

தரமான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கு

● நல்லூரில் முதன்மையான ஸ்தாபனம் ●

ஸ்ரீகாந் புத்தகசாலை - நல்லூர்

கோடானகோடி பக்தர்களின் துயர்துடைத்திடும் வேலவா! கொஞ்சுமொழி பேசி துயர்தீர்த்த வேலவா!! சரணம் சரணம் நீயே கதிவேலவா!!

★ சகல விதமான ஆங்கில மருந்து வகைகளுக்கும்

★ "கால்நடை" மருந்து வகைகளுக்கும்

நம்பிக்கையான ஸ்தாபனம் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்

★★★ பகவான் மருந்தகம் ★★★

221, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.

வேண்டுவன வேண்டியவர்களுக்கு ஈந்திடும் கதிர்வேலா!! அருள்பாலித்திடும் செல்வச்சந்நிதி முருகா!! எங்கள் துயர் தீர்த்திடுவாய் உன்னையே துதித்திடுவோம்!!

★ பெண்மைக்கு மெருகேற்றும் ★ இளமைக்கு எழிலூட்டும்

அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு நாடவேண்டிய இடம்

★ நதியா ஜுவல்லறி ★

02, கஸ்தூரியார் வீதி, [ஸ்ரான்லி வீதிச் சந்தி] யாழ்ப்பாணம்.

